# பத்திரிக்கை செய்தி

## நிலத்தை அளவீடு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.5,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய உரிமம் பெற்ற தனியார் சர்வேயர் கைது

புகார்தாரர் திரு.ராஜீ, பழைய காவல் நிலைய தெரு, விக்கிரவாண்டி தாலுகா, விழுப்புரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் புதிதாக ஒரு நிலத்தை வி.சாலை, விழுப்புரம் மாவட்டம் என்னும் இடத்தில் வாங்கியுள்ளார். இந்த நிலத்திற்கு அளவீடு செய்து தன் பெயரில் பட்டா மாறுதல் செய்ய விக்கிரவாண்டி தாலுகா அலுவலகம், விழுப்புரம் மாவட்டத்தில் விண்ணப்பம் செய்துள்ளார். விக்கரவாண்டி தாலுகா அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் திரு.வெங்கடாசலம், உரிமம் பெற்ற தனியார் சர்வேயர், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து பட்டா மாற்றம் செய்து கொடுக்க தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், விழுப்புரம் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 21.09.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.வெங்கடாசலம், உரிமம் பெற்ற தனியார் சர்வேயர், லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.